* 353 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government has any concrete programme to end drinking water scarity and to provide enough supply of drinking water at Pallavaram and its neighbourhood; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) &(இ) பல்லாவரம்—ஆலந்தூர் நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ஓர் அடங்கல் திட்டம் ரூபாய் 173.32 லட்சம் செலவில் நிறைவேற்றிடவும், அதனைப் பேணிக்காக்க ஆண்டுதோறும் ரூபாய் 3.76 லட்சம் செலவிடவும் அரசு தனது 24—1—1972-ம் தேதியிட்ட பொதுப்பணித்துறை ஆணை எண் 122-ல் அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ மனைகள்

* 354 வினா—**திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையில் கட்டடங்கள், மருத்துவர் குடியிருப்பு இல்லங்கள் அத்தனையுடன் அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்த இலவசமாக இடங்கள் அளிப்பதாக சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி 1970-ம் ஆண்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய தீர்மானத்தை அரசுக்கு அனுப்பி வைத்து அதற்கான திட்டத்தையும் அனுப்பியுள்ளார்.

(இ) இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

* 355 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடம்பூர் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட பணம் ஒதுக்கப்பட்டதில், தாய்-சேய்

1972 மார்ச் 8]

நல விடுதி கட்டடம் மட்டும் கட்டி முடிக்கப்பட்டு, குடும்பக்கட்டுப் பாடு மருத்துவமனைக் கட்டடம் இன்னும் நடைமுறைக்கு வராமல் உள்ளது என்பது பொது சுகாதாரத் துறையினாலும், கயத்தார் பஞ்சாயத்து யூனியனாலும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கடம்பூரில் அரசு மருத்துவமனை இல்லை. ஆனால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ளது.

கேரளாவுக்கு மாடுகள் செலவு

* 356 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாடுகள் விற்பனைக்காக கொண்டுசெல்லப் படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஒவ்வொரு வாரமும் சராசரியாக 2,000 முதல் 3,000 மாடுகள் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வளர்ப்பதற்கு அவை பயனற்ற தாக இருப்பதாலும் இறைச்சிக்காக மட்டுமே பயன்படுவதாலும், கேரளாவுக்கு அவை கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கவேண்டு மென்று எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தினசரி தென் மாவட்டங்களிலிருந்து இப்படி ஏராளமான மாடுகள் கேரளா வுக்குப் போவதால் தென் மாவட்டங்களிலே கால்நடைப் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதைத் தடுப்ப தற்கு அரசு இனியாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.